# அரசு அலுவலகங்களில் ஒழுங்கீனம் ஏன்?

55


- கல்லூரித் தேர்தல்
  சென்னை வைணவக் கல்லூரி வழி காட்டுகிறது.
- ஜோதிடம் பரிசோதிக்கப்படுகிறது...
- நமது வாழைத்தண்டு மருத்துவம்

செப்'85

மாத இதழ் • 60 பைசா

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

# அரசு அலுவலகங்களில் - ஒழுங்கீனம் ஏன்?



அரசு ஊழியர்கள் கடமை உணர்வின்றி அலட்சியப் போக்குடன் செயல்படுகின்றனர் என்கிற குற்றச்சாட்டின் அடிப்படைகளை ஆராயும் நோக்கத்துடன் பல அரசு ஊழியர்களுடன் கலந்துரையாடியதில் கீழ்க்கண்ட உண்மைகள் தெரியவந்தன.

(1) கடமை உணர்வுடன் கூடிய அரசு ஊழியர்கள் வெறுப் படையும் வகையில் அவர்கள் மீது வேலைச்சுமை சுமத்தப் படுகிறது. உங்களால் தான் இது போன்ற பணிகளைச்சுலப மாகச்செய்ய முடியும், மற்றவர்களால் செய்ய முடியாது எனச்சமாதானமும் சொல்லப்படுகிறது.

(2) கடமை உணர்வற்று பொறுப்பு என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் அரசு ஊழியர்களை தட்டி கேட்க ஆளில்லை. அவர்களுக்கு அளிக்கப்படும் சின்ன சின்ன பணிகளைக் கூட அவர்கள் செய்யாது கட்டி வைத்து விட்டு சோம்பேறிகளாய்த் திரியும் பொழுது அவர்களுக்கு அளிக்கப்படும் ஒரே தண்டனை அலுவலகத்திற்குள்ளேயே வேறு இருக்கைக்கு மாற்றம் செய்யப்படுவது மட்டுமே.

(3) இதனால் அவர்கள் கட்டி வைத்துச் சென்ற பணிகளை புதிதாக பொறுப்பேற்கும் அரசு ஊழியர் (கடமை உணர்வு உள்ளவராக இருப்பினும்) வெறுப்பும் சலிப்பும் காட்டியே நிறைவேற்றுகிறார்.

(4) பெண்களின் நியமனம் அதிகமாகியுள்ளது அரசு ஊழியர்களின் வேலைப் பகுப்பில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக ஒரு அலுவலகத்தில் இரண்டு பெண் ஊழியர்களும், இரண்டு

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆண் ஊழியர்களும் இருக்கிறார்கள் எனில் மூன்று ஆள் பணியை இரண்டு ஆண் ஊழியர்களுக்கு பகுத்து வழங்கி விட்டு, மீதமுள்ள ஒரு ஆள் பணியை இரு பெண் ஊழியர்களுக்கும் பகுத்து வழங்குகின்றனர். பெண்களால் அவ்வளவு தான் முடியும் எனச்சமாதானம் சொல்லப்படுகிறது.

(5) பெண்களுக்கு அலுவலக நேரத்திலேயே பத்திரிகைகள் படிக்கவும், சுமார் இரண்டு மணி நேரம் அரட்டைக் கச்சேரி நடத்தவும் பொழுது இருக்கும் பொழுது எங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை முழு நிறைவுடன் செய்து முடிக்கக் கூட பொழுது போதவில்லையே என பல ஆண் அரசு ஊழியர்கள் பொருமுவதை,கண்கூடாகக் கண்டோம்.

(6) உயர் அதிகார வர்க்கம் சுய நலம் மிகுந்த சோம்பேறி மடமாகிவிட்டது. இவர்களுக்கு வேலை என்றால் அநேகமாய் என்னவென்றே தெரியாது. அலுவலக நேரத்தில் இவர்கள் செய்வதெல்லாம் சொந்தகாரர்களுக்கும் நண்பர்களுக்கும் தொலைப்பேசித் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அரசு செலவில் வீண் பேச்சுக்கள் பேசுவதும் பைல்களில் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுவதும் மட்டுமே.

(7) ஒரு சில அலுவலகங்களில் தலையை முட்டும் அளவுக்கு ஒட்டடை படிந்து இருப்பது பற்றி அரசு ஊழிய நண்பர்களை வினவியபொழுது அவர்கள் சொன்ன பதில்: இந்த ஒட்டடை அடிக்கும் பணியினை யார் செய்வது என்று அவர்களோ அவர்கள் சார்ந்துள்ள சங்கங்களோ இன்னும் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் போட்டி மனப்பான்மையுடன் சச்சரவிட்டுக் கொண்டுள்ளனர். இந்த சச்சரவுகளுக்கு ஒரு முடிவு கட்டும் வகையில் இவர்களைக்கட்டுப்படுத்தி வேலை வாங்க வேண்டிய மேல் அதிகார வர்க்கம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் கை கட்டி வேடிக்கை பார்த்து நிற்கிறது.

— மோகன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# உடோபியா உண்மையாகலாம்

உடோபியா என்பது எல்லோருக்கும் எல்லா சுக போகங்களும் நிறைந்த வாழ்க்கை அமையக் கூடிய ஓர் இடம் என தாமஸ் மூர் என்பவர் எழுதிய உடோபியா காவியம் கூறுகிறது.

காவிய கற்பனை அளவில் இருந்த உடோபியா உண்மையாகலாம் என்பதற்கான செய்திகள் தற்பொழுது நமக்கு கிடைத்துள்ளன.

வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை — 12; குற்றங்கள் இல்லாததால் வேலையற்ற காவலர்கள் — 40; இராணுவம் — இல்லை; வேலை நிறுத்தம் — இல்லை; வரி — சிறிய அளவில் நாளுக்கு நாள் உயரும் பொருளாதார நிலை; மந்திரிசபை — சம்பளம் வாங்கும் மந்திரிகள் 2 பேர் மட்டும்.

இப்படிப்பட்ட அதிசயங்கள் நிறைந்த ஒரு நாடு இன்றைய உலகில் இருக்க முடியுமா? எனும் வினாவிற்கு விடை — லீச்டென்ஸ்டீன் எனும் நாடாகும்.

இந்நாடு ஆஸ்திரியாவுக்கும், சுவிட்சர்லாந்திற்கும் இடையில் 62 சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ளது.

முக்கிய தொழில் — செயற்கை பல் மற்றும் அஞ்சல் தலைகள் ஏற்றுமதியாகும்.

மன்னராட்சி நடைபெறும் இந்நாடு இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. இளவரசர் பிரான்ஸ் ஜோஸப் 1938ல் பதவியேற்றது முதல் அவரது திட்டமிட்ட நடவடிக்கைகளினால் இவ் உயர்வினைப் பெற்றது.

மன்னராட்சி நடைபெறும் ஒரு குறுகிய நிலப்பகுதியில் உடோபியா மலர முடியும் எனில், ஆட்சியாளர்கள் யோக்கியர்களாக இருந்தார்கள் எனில் மக்களாட்சியில் உடோபியா உண்மையாவதற்கு என்ன தடை இருக்க முடியும்.

— வெங்கட் — மோகன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

'அண்ணா என்கிற மனிதர்' படித்து பத்திரப் படுத்த வேண்டிய தொடர். ஆகஸ்டு '85 இதழ் அற்புதம்.

— ஊ. பரமசிவன், தேவிகுளம்.

கிரிக்கெட் இன்று மக்களை கிறு(க்கு) ஹெட் ஆக்கிய அபாயத்தின் அறிகுறியை எதிர்த்து மறியல் செய்த வீர கட்டுரை.

— இராஜ. வேலுச்சாமி, கருத்தனேந்தல்.

கடந்த இதழில் தெருவெங்கும் அசுத்தம் என்ற தலைப்பில் கூறிய அனைத்தும் உண்மை.

— பாஸ்கர், மதுரை.

கல்லூரிகளில், பண்பாட்டுத் தடத்திலிருந்து விலகி, தறி கெட்டோடும் இளம் மாணவச் சக்கரங்களுக்கு பொறுப்புச் சுமையைச் சுமந்து வெற்றி காண தீர்வு சொன்ன உமது துணிச்சலை மெச்சுகின்றோம்.

— பொன். ராஜேந்திரன், முருங்கப்பேட்டை.

சவரத் தொழிலாளிகளைப் பற்றி இதுவரை எந்த பத்திரிகைகளிலும் எழுதவில்லை. அவர்களுக்கும் குறைகள் உண்டு என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டிய சுட்டிக்கு பாராட்டுக்கள்.

— ஆர். விஜி, அரகண்ட நல்லூர்.

சுதந்திர நாட்டில் சுதந்திரமான மனிதனின் இன்றைய நிலைமையை ஆகஸ்டு மாத இதழில் அட்டைப் படத்தில் அருமையாக வெளியிட்டுள்ளீர்கள். — ப. மூர்த்தி, பெங்களூர்.

'சுட்டி அறம்' வேகமாகவும் விவேகமாகவும் தொடர வாழ்த்துக்கள்.

— ஜி. நாகராஜன், சத்திய மங்கலம்


ஜப்பான் நாட்டைப் பற்றி இதுவரை யாரும் வெளியிடாத — உண்மைகளை — அதன் மறுப்பக்கத்தை படம் பிடித்துக் காட்டிய தங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

— என். சண்முகம், திருவண்ணாமலை.

## வாசகர் எதிரொலி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அண்ணா என்கிற மனிதர்



## அண்ணா என்கிற எழுத்தாளர்

மாலை, இரவு நேரங்களில் பேச்சாளராக இருந்து விட்டு, நள்ளிரவிலிருந்து விடியற்காலை வரை எழுத்தாளராக விளங்குவார் அண்ணா. இடையிடையே பொடியும், தேநீரும் துணைபுரிய இரவு 12 மணியிலிருந்து உதய சூரியன் எட்டிப் பார்க்கும் வரை எழுதிவிட்டே உறங்கச் செல்வார். இந்தச் சூழலில் தான் அவரது புதினங்களும், சிறுகதைகளும், மடல்களும், நாடகங்களும் பிற எழுத்துக்களும் உற்பத்தியாகியிருக்கின்றன.

46 நாடகங்கள், 9 புதினங்கள், 4 சிறுகதைத் தொகுப்புகள், 22 கட்டுரைத் தொகுப்புகள், 6 வரலாற்று நூல்கள் அண்ணா என்கிற எழுத்தாளரால், சுமார் 20 ஆண்டுகளில் பல்வேறு காலக் கட்டங்களில் பெரும்பாலும் பத்திரிகைகளில் வெளிவந்து, நூல் வடிவு பெற்றிருக்கின்றன. இதைத் தவிர ஆங்கில நூல்கள், சொற்பொழிவு நூல்கள் வேறு!

அண்ணா எழுத்துக்களிலேயே 3000 பக்க அளவில் விரிந்துள்ளவை அண்ணா பத்திரிகைகளில் எழுதிய கடிதங்களே. தாமே ஆசிரியராக இருந்த திராவிட நாடு இதழில் மட்டும் 171 கடிதங்களும், பின்னர் காஞ்சி இதழில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

119 கடிதங்களும் ஆக 290 மடல்கள், அவர் எழுத்துலக ஆட்சிப் பரப்பின் பெரும்பகுதியை ஆக்ரமித்துள்ளன. இவை தவிர "ஹோம் லாண்டு," ஹோம் ரூல்" — வார இதழ்களில் 'டியர் பிரதருக்கு' 26 ஆங்கில மடல்களைத் தீட்டியுள்ளார்.

அண்ணாவின் எழுத்தைப் புரிந்து கொள்ள அவர் 15 ஆண்டுகள் பத்திரிகைகளில் வரைந்த மடல்களே போதும். இதை வைத்துக் கொண்டே பேராசிரியர். கு. விவேகானந்தன், ('அண்ணாயியம்' — தம்பிக்குக் கடிதங்கள்) பிஎச்.டி. ஆய்வுரையே செய்து டாக்டர் பட்டம் வாங்கியிருக்கிறார். அண்ணாவை சகல கோணங்களிலும் ஆய இம்மடல்களே போதுமானவை என்பதை அவர் ஆய்வுரை புரிய வைக்கிறது.

அன்றாட அரசியலின் சுவையான விவாதம், சொல் அழகு, உவமைச் சிறப்பு, ஏராளமான மேற்கோள்கள், கவர்ச்சித் தொடர்கள், நையாண்டித் திறன் போன்ற தேர்ந்த எழுத்தாளர்க்குரிய உத்திகளை அவரது எழுத்துக்கள் அனைத்திலும் காண முடியும்.

அண்ணாவின் எழுத்துக்கள் அவரின் கொள்கைகளுக்கு விளம்பர சாதனமாகவே பெரும்பாலும் அமைந்திருந்தது. உலகத் தலைவர்கள் பலரும் எழுத்தை இவ்விதமே கருவியாக்கியிருக்கின்றனர். சாதாரணர்களை, இளைஞர்களை எட்டிப் பிடிக்க, மிக எளிய வழியான "வசை பாடலும்," "காம வருணனையும்" பெருமளவு அண்ணாவால் கையாளப்பட்டிருப்பது அவரது நோக்கை மாசுபட வைக்கிறது.

அதுவும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, இதனை அண்ணா செய்வார். அண்ணாவால், 'உலக உத்தமர்' என்று அழைக்கப்பட்ட காந்தியடிகளைப் பற்றியும், 'ஜனநாயக சீமான்' என்று புகழ்ந்துரைக்கப்பட்ட ஜவகர்லால் நேருபற்றியும், தம்பிக்குக் கடிதம் எழுதும் போது:

"காந்தியார் என்றும் கடவுள் அல்ல, மகானும் அல்ல, மகாத்மாவும் அல்ல; சுசீலா நய்யார்கள் சூழ வர கோகில கானங்கள் கீதங்கள் பாட, கோபால சாமிகள்-

FREE E- BOOKS , www.thamizham.net.,

தாளங்கள் போட எம்மான் காந்தியார் கன்னிப் பெண்களின் தோளிலே கை போட்டு வரும் காட்சியைப் பார்த்தாயா? தம்பி!''

''பண்டிதரோ மனைவியை இழந்தவர். சிரிமாவோ கணவனை இழந்தவர். இருவரும் தனிமையில் சந்தித்துப் பேசினார்கள் என்றால் அங்கே என்ன நடந்து இருக்கும் என்பதை நீ தெரிந்து இருப்பாய் தம்பி!''

அண்ணாவின் படைப்புகள், கடிதங்கள் அந்தந்தக் காலங்களில் விருவிருப்பை ஏற்படுத்தினாலும், இலக்கியத் தரமென்ற சல்லடையில் சலித்தால், மிகச் சிலவே நிற்கின்றன.

புதிய நடை, சொல்லாட்சி இவற்றில் அண்ணா பலருக்கு முன்னோடியாக நின்று 20ஆம் நூற்றாண்டு தமிழ் உரைநடையில் புதுமைகளைப் புகுத்தினார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவரது மிகச் சில படைப்புகள் காலங்கடந்து வாழும் இலக்கியத் தரத்துடன் நிற்கக் கூடியவை, பல சீர்திருத்த கருத்துக்களை மிக ஆற்றலுடன் வலியுறுத்தியவை என்பதை எந்த விமர்சகனும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

அவருடைய சமூக பார்வை மிக்க இலக்கிய பணிக்கு அவரது சிறுகதை ''செவ்வாழை'' ஒன்றே சாட்சி. இது அண்ணாவின் ஒரு பக்கம்.

அதே சமயம். கம்பரசம், குமரிக்கோட்டம், ரோமாபுரி ராணிகள் போன்ற நூல்களை எழுதிய அண்ணா என்கிற எழுத்தாளரைப் பற்றி என்ன முடிவுக்கு வருவது? இவை சமூக சீர்திருத்த மேல் பூச்சு தடவப்பட்ட செக்ஸ் நூல்கள் என்பதை மனசாட்சியுள்ள கழகத்தினரே புரிந்து கொள்வார்களே. அண்ணா இவற்றை எழுதிய காலத்திலும், பிறகும் இவற்றை ஆர்வமுடன் படித்தவர்கள், எத்தனை பேர் சீர்த்திருத்த நோக்கோடு இவற்றைப் படித்தார்கள்? இந்நூல்களில் மேலோங்கி நின்ற உணர்வு பாலுணர்ச்சியேயன்றி சீர்திருத்தமல்ல.

FREE E- BOOKS , www.thamizham.net.,

'ஓர் ஆபாசப் படத்தை ஒருவன் கண்டவுடன் இழிக்கிறான் — அவன் யோக்கியன். இரண்டாமவன், அதைத் தனிமையில் ரசிக்கிறான் — அவன் கெட்டவன். 3—வது ஆசாமி அந்தப் படத்தை "சீ! என்ன மோசமான படம் பார்! எவ்வளவு ஆபாசம்! அநியாயம்!" என்று கண்டிப்பது போல பாசாங்கு செய்கிறான். இவன் உண்மையில் ஆபாசத்தைப் பரப்புகின்ற 'ஏஜென்ட்' ஆகிறான்.

கம்பனின் குற்றத்தையும், புராண அசிங்கங்களையும், ரோமாபுரி ராணிகளின் வாழ்க்கையையும் கண்டிப்பதற்கு அண்ணா கையாண்ட வழி இந்த 3—வது பேர்வழியின் நடத்தையை ஒத்திருக்கிறது.'

இப்படி அண்ணாவின் இந்த 3 நூல்களையும், 1953 மே மாதம் வெளியான ஒரு மாத இதழ் விமர்சித்திருக்கிறது. இது மறுக்கக்கூடிய கருத்தா?

அண்ணா ஒரு தேர்ந்த எழுத்தாளர்; கற்பனை வளம் கொண்ட சொல் ஏர் உழவர்; என்ற புகழெல்லாம் அவரது நசிவு எழுத்துக்களால் பட்டுப் போகாமலிருப்பதைக் காலம் காப்பாற்றுமா?

—— எழில்

(அடுத்து: அண்ணா என்கிற நாடக — சினிமா பிரமுகர்)


**எமரால்டின் தமிழ் வெளியீடுகள்**

* பாரதி இதயம் - Dr. K. S. நாகராசன் - ரூ. 7.00
* மக்கள் சினத்தில் மலர்ந்த எண்ணங்கள் - Dr. மு. நாகநாதன் - ரூ. 10.00
* பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும் - Dr. வை. சச்சிதானந்தன் - ரூ 20.00

EMARALD PUBLISHERS, 135, ANNA SALAI, MADRAS - 600 002.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# பம்பாய் தமிழர்களும் வீடியோ நோயும்

பம்பாயின் வட பகுதி 'பொய்சர்'

இங்கு வெளி மாகாண மக்களோடு தமிழ் மக்களும் பத்தாயிரம் பேர் வசிக்கின்றனர்.

இங்குள்ள தொழிற்சாலைகளில் பெரியவர்கள் தவிர சிறுவர்களும் பெருமளவில் தொழில் செய்து பிழைத்து வருகின்றனர்.

சில பெற்றோர்கள் தங்களது கஷ்டத்தையும் வறுமையையும் பொருட்படுத்தாமல் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பி வைக்கின்றனர். அவ்வாறு உயர்நிலைப் பள்ளிகளின் படிக்கும் மாணவ மாணவிகளின் மொத்த எண்ணிக்கை 15க்கு உள்ளே தான் எனத் தெரிகிறது. துவக்கப் பள்ளிகளில் பிள்ளைகள் சுமார் 50 பேர்கள்.

1983—ல் மகாராஷ்டிரா 10—ஆம் வகுப்புத் தேர்வில் தமிழில் கோகிலா என்னும் சிறுமி முதலாவதாக தேறியுள்ளாள்.

ஆனால் இங்கே வீடியோ நோய் அதிகமாக பரவி ஏழை மக்களின் வருமானத்தையும், பள்ளிக்குழந்தைகளின் கல்வியையும் பாதித்து வருகிறது. கிட்டதட்ட 98 வீடியோ தியேட்டர்கள் தினம் ஐந்து காட்சிகளுக்குக் குறையாமல் நடத்தப்படுகின்றன. 90% வருமானம். காட்சி கட்டணங்களும் ரூ 2 முதல் ரூ 3 வரை. இவற்றையும் தமிழ்ப் பெருங்குடி மக்களே உள்ளூர் பிரமுகர்களின் ஆதரவோடும் போலீஸின் துணையோடும் நடத்தி வருகின்றனர். கட்சித் தலைவர்களும், சங்கத்தலைவர்களும் கூட உடந்தை, அவர்களை எதிர்த்துப் போரிட நேர்ந்தால் அது இனப் பிரச்சினையாகி, பெரும் குழப்பங்கள் உண்டாகிவிடும் என்னும் அச்சத்தால் பொது மக்கள் வாளாவிருக்கின்றனர். அரசாங்கம் ஆவன செய்ய 'அதற்கு எடுத்துச் சொல்பவர்கள் யார்' என்பதால் மனம் எரிந்து கொண்டு உள்ளனர். - பம்பாய்வாசி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இளம் நூலக அதிகாரி

## சுட்டிப் பயல்

# ஜேசன்



ஓய்வு பெற்ற அமெரிக்கக் கப்பற்படையைச் சேர்ந்த திரு. வெய்ன் தம்பதியர், 'எலிஸ்னோர்' என்னும் சிற்றூரில் வந்து குடியமர்ந்தனர். இவரது மகன் ஜேசன் 10 வயதுச் சிறுவன் ஒரு நூல் நிலையத்தை அச்சிற்றூரில் அமைக்க முயற்சித்தான்.

அவ்வூரில் முன்பொரு நூல் நிலையம் நடத்தப்பட்டு, அடிப்படை வசதிகள் குறையவே, மூடி வைக்கப்பட்டிருந்தது. அதில் நிறைந்து கிடந்த புத்தகங்கள் ஜேசனின் பார்வைக்கு வைக்கப்பட்டன. "ஓ! இந்தப் புத்தகம் போதும். இனி அரசாங்க அனுமதியுடன் ஒரு நூல் நிலையத்தைத் திறக்கலாம்."

அதன்படி முதலில் நகர பஞ்சாயத்து சபையில் வைத்தான். ஒப்புதலுக்குக் காத்திருந்தான். தகவல் இல்லை... பல நாட்கள் விடாமுயற்சியாக தொடர்பு கொண்டதன் மூலம் அவனுக்குக் கிடைத்தபதில்: ஒரு பொறுப்புமிக்க பெரியவர் அங்கு அமர்த்தப்பட வேண்டும். இல்லையெனின் உத்தரவு வழங்க இயலாது.

அதன் பின்பு, நகர கவுன்சில் உறுப்பினர்களின் உதவியை நாடி, அவனது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நூலகம் செயல்படத் தொடங்கியது.

மின் இணைப்பு போன்ற பல்வேறு உதவிகளை ஊர்ப் பிரமுகர்கள் பலர் செய்து கொடுத்தனர். புத்தகங்களைச் சேகரிப்பதில் பெற்றோரும், சகோதர, சகோதரிகளும் உதவினர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

தனது 11—வது பிறந்த நாளைக் கொண்டாடிய சில தினங்களில் நூல் நிலையத்தை பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தான். நூல் நிலையம் சுறுசுறுப்பாக இயங்கியது. பனிக்காலத்தில் மிகவும் மோசமடைந்தது. ஜேசன் மட்டும் கோட்டை மாட்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். சில சமயம் மனம் குழம்பி, நூலகத்தை மூடி விடலாமா என்று கூட யோசித்தான். குளிரைக் குறைக்க தரைவிரிப்புகளை மட்டும் ஓர் மண்ணெண்ணை வெப்ப விளக்கையும் வைத்துக் கொண்டு சிரமப்பட்டு தொடர்ந்து நூலகத்தை நடத்தி வந்தான்.

அச் சிற்றூரில் வாழ்ந்த பத்திரிகைக்காரர் ஒருவர் "இளம் நூலக அதிகாரி' என்னும் பெயரில் ஜேசனைப் பற்றி ஒரு கட்டுரை போல் எழுதி தனது பத்திரிகையில் வெளியிட்டார்.

மற்றுமொரு பெண்மணி 'அமெரிக்காவின் இளம் நூலக அதிகாரி' என்னும் தலைப்பில் அதே கதையை வேறொரு பத்திரிகையில் வெளியிட்டார்.

ஜேசனின் புகழ் அமெரிக்கா முழுவதும் பரவியது. 1982—ல் தேசிய நூலக வளர்ச்சிக் கழகத்திலிருந்தும், அறிவியல் செய்தித் தொடர்பு ஸ்தாபனத்திலிருந்தும் உறுப்பினர்கள் அங்கு வந்து அவனது நூலகத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்து கொண்டு உரைகள் ஆற்றினான். பின்பு, தெற்கு கலிபோர்னியா பல்கலைக் கழகம் அவனது கல்விச் செலவுகள் முழுவதையும் ஏற்றுக் கொண்டது. அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் அதிபர் ரீகனின் முன்னிலையில் பாராட்டிதழ்களையும் பரிசுகளையும் பெற்றான். ஒரு பத்து வயதுச் சிறுவனின் இடைவிடா முயற்சி வெற்றியளித்தது.

ஜேசன்: என் வயதையொத்த 6—ஆம் வகுப்பு மாணவர்கள் என்னைப் பாராட்டிய போது தான் நான், உண்மையில் மகிழ்ச்சியடைந்தேன்.

— நன்றி: ரீடர்ஸ் டைஜஸ்ட்

தகவல்: ம. செல்வராஜன்

[redacted]

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஜோதிடம் பரிசோதிக்கப்படுகிறது



'இம்பிரிண்ட்' மாத ஏட்டின் நிர்வாகிகள் பம்பாய் நகரின் ஆறு பிரபல சோதிடர்களிடம் ஒருவரை பலன்கள் கேட்க அனுப்பி கீழ்க்கண்ட முடிவுகளை ஆதார பூர்வமாக வெளியிட்டுள்ளனர்.

(1) சோதிடம் — பணம் எளிதில் சம்பாதிக்கும் ஒரு புரட்டுத் தொழிலாக உள்ளது.

(2) ஒரே நபருக்கு ஆறு சோதிடர்கள் கூறிய பலன்களையும் ஒப்பிட்டு நோக்கிய போது ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாது கேலிக்குரியதாக இருந்தது.

(3) சோதிடம் கேட்பவனை மயக்கும் வார்த்தைகளை வீசி கவருவதிலேயே அதிக கவனம் செலுத்தினர்.

(4) சோதிடம் கேட்க வந்தவனின் முகக்குறிப்பிற்கு ஏற்பவும் அவனது வாயிலிருந்தே வார்த்தைகளைப் பிடுங்கியும் முன்னுக்குப் பின் முரணை பலன்கள் சொல்லுகின்றனர்.

(5) அவர்களின் பிரதாபங்களை அளப்பதிலேயே நிறைய நேரத்தை செலவிடுகின்றனர்.

(6) தவறான பலன்களை சொல்லிவிட்டு சோதிடம் கேட்க வந்தவர் அதை சுட்டிக் காட்டிய போது நன்றாக சமாளிக்கக் கற்று வைத்துள்ளனர்.

(7) அவர்கள் சொல்லும் பலன்களில் அவர்களுக்கே நம்பிக்கையில்லை. ஏனெனில் சொல்லும் பலன்களில் 50 அல்லது 60 சதவீதம் அதிக பட்சம் 75 சதவீதம் தான் சரியாக இருக்கும். தவறுகள் ஏற்படலாம் என்பதை ஆறு சோதிடர்களுமே ஒப்புக் கொண்டனர்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

**கலைவாணர் வாழ்வில்...**

160 பக்கங்கள்

**18-9-1985 அன்று** நூல்வெளி வரும்!

கலைவாணர் நிலைய
வெ. நாராயணன்
(பரந்தாமன்)
ஆக்கியது.

விலை ரூ 12.00
முன் கூட்டியே பதிவு செய்து
கொண்டால் ரூ.10.00 தான்.

**பரந்தாமன் பதிப்பகம்,**
L.23, தெற்கு போக் சாலை, சென்னை - 600017.

• முதன் முறையாக வெளியிடுகிறோம்!
புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்!

- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

தொடர்புக்கு:

**வேல் டைப் பௌண்டரி**

38. குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை - 7.
தொலைபேசி: 664293

(8) கம்யூட்டரை வைத்துக் கொண்டு பலன்கள் கணித்துச் சொன்ன சோதிடர் தன் தவறுகளுக்கு கம்யூட்டரின் மீது பழி சுமத்தினர்.

(9) பலன் கேட்பவனை திகிலடையச் செய்யக் கூடிய இரண்டொரு வார்த்தைகளை பலன் சொல்லும் பொழுது திட்டமிட்டு புகுத்தி மனச் சலனத்தை ஏற்படுத்துவதில் குறியாக இருக்கின்றனர்.

பொதுமக்களின் மூட நம்பிக்கைகள், எதிர்காலம் பற்றி அறியும் ஆவல் என்ற அடிப்படையில் பொய்களை கவர்ச்சியாகப் பேசி பணம் பண்ணும் புரட்டுக் கலையாகவே சோதிடக்கலை இன்று வளர்ந்து வருகிறது. மக்கள் இதனை திட்டமிட்டு புறக்கணிக்க வேண்டியது அவசியம். — வெங்கட்

நன்றி (இம்பிரிண்ட் — டிசம்பர் 1984)

FREE E- BOOKS , www.thamizham.net.,

மூன்றந்தரமான சோப்போ, உதட்டு அல்லது கன்னச் சாயமோ வாங்கும் போது முகர்ந்து பாருங்கள். செத்த மிருகத்தின் துர்நாற்றம் அதில் வீசக்கூடும். அசுத்த தெருமுனை கடைகளில் வடை, பக்கோடா போன்ற எண்ணெய் பதார்த்தங்களைச் சுவைப்பதுண்டா? பொறிக்கும் எண்ணெய், பல இடங்களில் செத்த எருமை அல்லது கழுகுகள் பாதி குதறிப் போட்ட பசுவின் கொழுப்பாக இருக்கக்கூடும் என்பது பலருக்குத் தெரியாது. சில சுய நலமிக்க சமூக விரோத வணிகர்கள் செய்யும் அருவருப்பான வேலை வருமாறு:

திறந்த குதிரை வண்டி அல்லது சைக்கிள் ரிக்ஷா பல இடங்களுக்குச் செல்கிறது. செத்து அழுகி அங்கங்கே கிடக்கும் பிராணிகள் அதில் நிரப்பப்படுகின்றன. நகருக்கு வெளியே ஒரு குறிப்பிட்ட வெட்டவெளிக்கு அந்த வண்டி போய்ச் சேரும்போது அரை டஜன் நாய்களும், இரு டஜன் கழுகுகளும் வரவேற்கக் காத்திருக்கின்றன.

வண்டிக்காரர் அடுப்பு மூட்டி, வாணலியில் மிருகங்களின் சதைகளைப் பிய்த்து சுரண்டி அதில் போடுகிறார். கொஞ்சம் வெந்தபின், கொழுப்பு வாணலியின் மேலே மிதக்கிறது. அதனை ஓர் அழுக்குத் துணியில் வடித்தெடுத்து தகர டின்களில் நிரப்ப நிரம்பிய பின், எஞ்சி நிற்கும் எலும்புக்கூடுகளையும், சதை மிச்சங்களையும் நாய்களுக்கும், கழுகுகளுக்கும் விருந்தாக்கி, நகருக்கு வருகிறார் — அவலத்தைக் காசாக்க! — (ஆதாரம் "சன்") — 'ஸ்டெனிஸ்லாஸ்'






FREE E- BOOKS , www.thamizham.net.,

## மனநோய்
## மருத்துவ முறைகள்

[redacted]

மணிமேகலை பிரசுர ஆசிரியர் குழு:
மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை — 17
விலை ரூ. 8.50, பக்கங்கள் 160




# புத்தகப் பிழிவு

இந்தியாவைப் பொறுத்தவரையில் சுதந்திரத்திற்குப் பின்னர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் நிலையை உயர்த்துவதற்கு அரசு எந்திரம் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டியும் அவைகளின் பயன் அனைத்துமே ஒட்டு மொத்தமாக செல்வந்தர்களின் உயர்வுக்கே உதவுவதால் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே அனுபவ ரீதியில் நம்மால் உணர முடிகிறது.

இந்நிலையில் நாளுக்கு நாள் வறுமையின் கொடுமைகளுக்கும் நெருக்குதல்களுக்கும் ஆளாகிவரும் மனிதர்கள் மனச்சிக்கல்களுக்கும் குழப்பங்களுக்கும் பலியாகி புரியாத பயங்களினால் தான் மன நலம் பாதிக்கப்பட்டு மனோ வியாதி உருவாகிறது என்பதை பல கிளை தலைப்புகளில் தெளிவுற விளக்கியுள்ளனர்.

அடக்கல், ஒடுக்கல், மன வலிமை குறைதல், காரணமற்ற மனச்சோர்வு, உடல் நஞ்சால் ஏற்படுகிற உளக் கோளாறுகள், பலவகை அச்சங்கள் முதலியன மன நலத்தை பாதிக்கச் செய்து மனவலிவைக் குன்றச் செய்கின்றன.

(இவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுவது இயல்பு. பகுத்தறிவால், சிந்திக்கும் ஆற்றலால் இவைகளை பகுத்துணர்ந்து வெல்லும் ஆற்றல் குறையும் பொழுது மனநலம் பாதிக்கப்பட்டு மனநோய் ஏற்படுகிறது)

FREE E- BOOKS , www.thamizham.net.,

நம்மை 17 வகை பீதிகள் தாக்கும் அபாயமுண்டு எனவும், பைத்தியம், காக்கை குரல் கை வலிப்பு, அழுங்கு நோய் (காரணம் புரியாத மன வாட்டங்களால் தானே உருகி அழிதல்), மதுவெறி, தாழ்வு மனப்பான்மை, தூக்கநோய், மறதி, கள்ள மனம், கட்டுங்கடங்காத விபரீத உணர்ச்சிகள், உறக்கமின்மை, துயில் நடைநோய் முதலியன மனநோய் வகைகளாகும்.

மன நலத்தை புரிந்து கொள்ளுங்கள் என்கிற தலைப்பில் 28 வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவை மேல் பார்வைக்கு சாதாரண வினாக்கள் போன்றே காட்சி தருகின்றன. நமது சரியான உள் மனத்தினை நாமே அலசி ஆராய்ந்து அறிந்து கொள்ள இவை நிச்சயம் உதவும்.

உதாரணத்திற்கு இரண்டு வினாக்கள்:

"கவரில் தபால்தலைகளை தலைகீழாக ஒட்டிவிடாமல கவனித்துச் செய்வீர்களா?"

"மற்றவர்களின் குழந்தைகள் உங்களை பெயரிட்டிழைக்கச் சம்மதிப்பீர்களா?"

மனம் திரிவடைதற்கு பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. அவற்றில் முக்கியமானவை எண்ணியது முடிக்க இயலாத வகையில் தடைகள் ஏற்படுதல், போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், கடுமையான பணப்பற்றாக் குறை ஆகியனவாகும்.

இந்நூலில் மனம் என்றால் என்ன? மனத்தின் இயல்புகள், மனநோய் ஏன் ஏற்படுகிறது. அதனைப் போக்கும் வழிமுறைகள் ஆகியன தெளிவுற விளக்கப்பட்டுள்ளன.

இம்மாதிரி நூல்கள் இன்னும் வெளியாவதற்கு இந்நூல் தூண்டு கோலாய் அமைந்துள்ளது.

— வெங்கட் — மோகன்

சென்னை புறநகர் பகுதியில் மிக குறைந்த விலையில் வீடுகள், வீட்டுமனைகள் வாங்க, விற்க எழுதுங்கள்

'வெங்கட்' 24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை — 600 053.



FREE E- BOOKS , www.thamizham.net.,

# சிந்தனைச் சந்தை

அதிகம் சிந்திப்பவர்கள் செயல்பட மாட்டார்கள் என்று சொல்கிறார்களே உண்மையா?

— குமரி. ஜெய், சென்னை — 5.

பல நேரங்களில் உண்மை தான். ஆனாலும், அதற்காகச் சிந்தனையாளர்கள் யாருமே செயல்படுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிடாதீர்கள்!

புதுக் கவிதை எந்த விதத்தில் ஒசத்தி?

— செல்வி. எம்.ஜே. சாந்தி, போடி நாயக்கனூர்.

பாட்டும், கவிதையும் ஒன்றுதான் என்ற மாயையை உடைத்த விதத்தில்! கவிஞர் பாலாவின் 'புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை' புத்தகத்தில், 'ஒசத்தி'க்கான வேறு பல காரணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன!

தமிழகத்தில் குண்டு வெடிப்பு சீக்கியர்களின் ஊடுருவல்களைத் தானே காட்டுகின்றது?

— ஜி. ஞான சேகரன், நாச்சியார் கோயில்.

'தி வீக்' இதழில் ஒரு துணுக்கு படித்தேன் — "ராஜீவ் காந்தி குளியலறையில் வழுக்கி விழுந்து விட்டார், சீக்கியரின் சதி" என்று!

அடுத்தப் பிறவியில் தாங்கள் எப்படி இருக்க விரும்புகிறீர்கள்? — ஜி. மல்லேஸ்வரன், ஜலகண்டபுரம்

ஏன்... இந்தப் பிறவி பற்றிய எந்தக் கேள்வியும், இப்போது தங்கள் கைவசமில்லையா? நான், இந்தப் பிறவியில் — இந்தப் பிறவியில் மட்டுமே நம்பிக்கை உடையவன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

'சமூக சேவை' செய்வது நல்லதா?

— மாதவ. இராமன், கிருஷ்ணகிரி.

இந்தச் சமூகத்தை இப்படியே வைத்துக் கொண்டு, இதற்குச் சேவை செய்வது, அஸ்திவாரமே ஆடிக் கொண்டிருக்கும் கட்டிடத்தின் ஜன்னலுக்கு வர்ணம் பூசும் வேலையாகவே முடியும் (நன்றி: வைரமுத்து)! சமூக மாற்றத்திற்கான சேவையே இனி நல்லது.

நம் மக்களையே பதம் பார்க்கும் இந்திய இராணுவத்தால் இலங்கை தமிழர்க்கு பாதுகாப்பு கிடைக்குமா?

— க. கதிர் குன்றன், அமரர் பூண்டி.

அவர்கள் நம் ஆயுதங்களைத் தான் கேட்கின்றனர்; இராணுவத்தை அல்ல! (விஷயம் தெரிந்தவர்கள் தான் போலிருக்கிறது)!

இன்றைய கல்வி முறையில் மாற்றம் தேவையா, எத்தகைய மாற்றம்?

— கா. மனோகரன், மதுரை.

தனக்குத் தேவையான குமாஸ்தாக்களை உருவாக்குவதற்காக வெள்ளைக்காரன் ஏற்படுத்திய கல்வி முறையை, வெட்கமில்லாமல் இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறோம். சுய சிந்தனையையும், புதிய கலாச்சாரத்தையும் கொண்ட புதிய மனிதனை உருவாக்கும் மாற்றம் தேவை

– பதில்கள் : மது

பிச்சை எடுப்பான் தமிழன் என்ற புத்தகத்தை எழுதிய பறக்கும் படைத் தலைவர் திரு. எம்.கே. சீனிவாசன் இப்பொழுது பிச்சை எடுக்கிறான் தமிழன் என்ற நூலை எழுதி கொண்டிருக்கிறார். நூல் விரைவில் வெளிவரவிருக்கிறது.

நூல் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
பறக்கும் படை வெளியீடு,
10, வியாசர் தெரு, தியாகராய நகர், சென்னை — 600 017.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## நாம் அறிய வேண்டியவர்கள்

அரசு நடத்தும் பேருந்துகளில் மனசு கசங்கிப் போகும் வண்ணம் நடந்து கொள்ளும் கண்டக்டர்களால், அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துத் துறைக்கே அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது.

கடுகடுத்த முகம், "சில்லறையில்லை இறங்கு" என்ற ஒருமை அதட்டல், பஸ் ஸ்டாப்பில் நிறுத்தாமல் அலைக்கழித்தல், எச்சில் தொட்டு டிக்கெட் தரும் அசிங்கம் — இவையே நாம் அடிக்கடி நடத்துனர்களிடம் காணும் நடத்தை.


இப்படி இல்லாமல், புன்சிரிப்பு தவழும், இனிய போக்குகள் கொண்ட ஒரு நடத்துனரைப் பார்க்க முடியுமா என்று ஏங்கி நின்ற போது சென்னை பல்லவன் போக்குவரத் தின் தடம் எண் 41 இல் ஒருவரின் நடத்தை வியக்க வைத்தது.

எச்சில் தொடாமல், நீர் கொண்ட ரப்பர் பஞ்சில் தொட்டு டிக்கெட்டைப் பிரித்து, கையில் அலங்கோலமாக கிழிக்காமல், அதற்கென்று உள்ள கருவியால் துளை செய்து, நளினமாக, நாகரிமாக, பொன். மாசிலாமணி டிக்கெட் கொடுக்கிறார். (அரசு எல்லா நடத்துநர்களுக்கும் இதுபோல ரப்பர் பஞ்சும், துளை போடும் கருவியும் வழங்கி வந்ததாம். ஆனால் எத்தனை பேர் இதனைப் பயன்படுத்திப் பார்த்திருக்கிறோம். பயன் படுத்தாததைப் பற்றி போக்குவரத்துத் துறையும் கவலைப்பட்டு கண்டித்ததும் இல்லை!)




FREE E- BOOKS , www.thamizham.net.,

கடந்த 12 ஆண்டுகளாக பணியாற்றும் இவர் ஒரு முறை கூட பயணிகளிடம் கசப்பாக நடந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்திற்கே வழி ஏற்படவில்லையாம். பயணிகளுக்கு சிறப்பாகப் பணியாற்றுவதில் ஆர்வம் இருப்பதால், இந்த வேலை அவருக்கு மிகவும் மனதிருப்தி தருகிறதாம். எவ்வளவோ கவர்ச்சிகரமான சம்பளம் வாங்குவோரிடமிருந்து பெற முடியாத இந்த பதில், இந்த கண்டக்டரிடமிருந்து வருகிறது!




எல்லா விதத்திலும் ஒரு பொதுத் துறை ஊழியனுக்குரிய முன் மாதிரிகைப் பண்புகள் நிறைந்து இவரை ஊக்குவிப்பதும், பாராட்டுவதும் அரசின் கடமை. அரசு அப்படி ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. பயணிகள் பாராட்டி ஊக்குவிப்போம். எல்லா கண்டக்டர்களும் இப்படி இருந்தால் பஸ் பயணமே மகிழ்ச்சியாக இருக்குமே!

— பேட்டி: ஷேக்

## கேலிக்கூத்து



வேருக்கு வெந்நீர்
விழுதுக்குப் பன்னீர்
ஆம்.
இங்கே
அப்பனுக்குச் சாராயம்
பிள்ளைக்குச் சத்துணவு

— ப. தங்கராசு

## சுதந்திரம்



ஒளி காண
விழி கேட்ட
குருட்டு
இந்தியர்களுக்கு
கொடுக்கப்பட்டது
"கறுப்பு கண்ணாடி"

— சோலை
இசைக்குயில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

"படிப்பறிவே இல்லாதவர்கள RIMP என்று போர்டு மாட்டிக் கொண்டு மருத்துவம் செய்கிறார்கள்..."



# மஞ்சள் காமாலை மருந்து...

சென்னை — தி. நகர் நீல கண்ட மேத்தா தெருவிலுள்ள ஒரு புகழ் பெற்ற மருத்துவ மனையில் மஞ்சள் காமாலை நோய்க்கு பல ஆண்டுகளாக சிறப்பு கிசிச்சை அளித்து வருகிறார்கள்.

இச்சிகிச்சையின் சிறப்பம்சம் நோயாளிகளின் 100க்கு 99 பேர் ஓரிரு வாரங்களிலேயே பூரண குணம் அடைந்து வருகிறார்கள். நாள் ஒன்றுக்கு சுமார் 80 பேர் இங்கு சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர்.

ஒரு 'கப்' மருந்து சாற்றின் விலை 5 ரூபாய். மஞ்சள் காமாலையும் வேறு உபாதைகளும் சேர்ந்திருந்தால் அதற்காக தனியாக ஹோமியோபதி மெடிசன் ரூ.40 வரை வசூலிக்கி றார்கள். சிகிச்சை பெறுவோர்களில் பெரும்பாலோர் ஏழைகள்!

நோய் தீர்க்கும் இவ் அபூர்வ "மருந்தை" வெளியிட்டால் மொத்த சமூகமும் பயன் பெறுமே...? மருத்துவ மனையில் கேட்டோம். "ஸாரி... வெளியே சொல்வதற்கில்லை. இது எங்கள் ஃபேமிலி மெடிசன். சொன்னால் பலன் போய் விடும் (?)" என்று பதில் வந்தது.

இவர்கள் கொடுக்கும் இம் மருந்து ஏறத்தாழ (!) ஹோமியோபதி மெடிசனை அடிப்படையாக கொண்டது என்கிறார்கள். ஆனால் ஹோமியோபதியில் மஞ்சள் காமாலைக்கு இப்படி ஒரு மருந்து இல்லை என்று தெரிய வருகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## ஓ... இது தான் மதுரையோ?...

மதுரை பேருந்து நிலையத்துக்குள் ...

உள்ளே நிற்கக்கூட இடமில்லாமல் பெருகிவிட்ட பிளாட்பாரக் கடைகள். பெரும் வியாதியஸ்தர்கள் பிளாட்பாரத்தில் படுத்துக் கொண்டு எச்சில்களைத் துப்பி சிறு நீர் கழித்து, இன்னும் கொஞ்சம் போனால்...?

சற்று இடம் மாறி நிற்போமே என்றெண்ணிச் சென்றால் பிச்சைக்காரர்களின் பெருந்தொல்லை.

''யோவ்! இங்கு வரும் பஸ்களில் உள்ள பொருட்களை நாங்கள் தான் இறக்குவோம். நீங்கள் இறக்கக்கூடாது. அப்படியே இறக்கினாலும் எங்களிடம் ''படி''யைக் கொடுக்கணும்'' இது அங்குள்ள சுமை தூக்குவோரின் அராஜகம்.

பணம் தராவிட்டால் ஒன்றாகக் கூடிக் கொண்டு வெளியூர் பயணிகளை மிரட்டுவதால் பயந்து கொண்டு பணத்தை அழுதுவிட்டே செல்ல நேரிடுகிறது.

—— தகவல்: ஜெகவை பால்ராஜ்
நன்றி: 'தோணி' மாத இதழ்

ஒரு அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவர் ஒரு மருந்தை "ரகசியம்" என்று சொல்லி பொது மக்களிடம் விற்யோகிக்கலாமா? சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு அதிகாரியை கேட்டோம். அதற்கு அவர் "இதைப் போய் பெரிய்ய விஷயமாய் கேட்கிறீர்களே, நாட்டில் மூலை முடுக்களிளேல்லாம் படிப்பறிவே இல்லாத பலர் R.I.M.P. என்று போர்டு மாட்டிக் கொண்டு மருத்துவம் செய்கிறார்களே? இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று நம்மையே திருப்பிக் கேட்டார்.

நாம் யாரை கேட்பது? இந்த "தில்லுமுல்லு" விவகாரங்களையெல்லாம் கவனிக்க கூட முடியாமல் "இந்திய மருத்துவ துறை" அப்படியென்ன பெரிதாய் வெட்டி முறிக்கிறது.

- ராமன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வைணவக் கல்லூரித் தேர்தல்



"கல்லூரி தேர்தலா? தெருக்கூத்தா?" என்ற தலைப்பில் சென்ற இதழில் "விழிப்பூட்டி" எழுதிய கட்டுரை ஆயிரக்கணக்கான கல்லூரி மாணவர்கள் மத்தியில் ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

கல்லூரியில் "தேர்தலை" அரசியல் கலப்பும், ஆர்ப்பாட்டமும் இன்றி எப்படி நடத்துவது...? என்று திணறிக் கொண்டிருக்கும் எண்ணிறைந்த கல்லூரி நிறுவனங்களுக்கு ஒரு வழிகாட்டியாய் சென்னை "வைணவக் கல்லூரி" நடைமுறைப் படுத்தியிருக்கும் புதிய தேர்தல் முறையை இங்கு தருகிறோம்.

து.கோ. வைணவக் கல்லூரியின் புதிய தேர்தல் முறை:

கல்லூரி ஆண்டுத் துவக்கத்தில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் இரண்டு மாணவர்கள் அவர்களின் பிரதிநிதிகளாக வகுப்பறைக்குள்ளேயே "குரல் ஓட்டின்" அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப் படுகிறார்கள்.

வகுப்பில் பிரதிநிதியாக செயல்பட விரும்பி "மனு" தாக்கல் செய்பவர்கள் நல்ல நடத்தை உள்ளவர்களாகவும், கடந்த தேர்வில் எழுதிய பாடங்கள் அனைத்திலும் தேர்ச்சிப் பெற்றவராக இருத்தல் அவசியம்.

தேர்தலில் "அரியர்ஸ்" இல்லாத பிரதிநிதிகளாக செயல்படாத பிற அனைத்து மாணவர்களும் கூட போட்டியிடலாம். ஆனால் "வாக்கு" அளிக்கும் உரிமை வகுப்பு பிரதிநிதிகளுக்கு மட்டுமே உண்டு.

தேர்தலில் "பதவி" போட்டி, துணை செயலாளர், செயலாளர், வைஸ் சேர்மன் ஆகிய மூன்றிற்கு மட்டுமே.

FREE E- BOOKS , www.thamizham.net.,

"சேர்மன்" பதவிக்கான நபரை "முதுகலை" வகுப்புகளிலிருந்து கல்லூரி முதல்வரே நேரடியாக தேர்வு செய்வார்.

தேர்தலில் வாக்களிப்போர் அதிகபட்சம் 80 பேருக்கு (பிரதிநிதி) மேல் தாண்டமாட்டார்கள். இதன் மூலம் கல்லூரி வளாகத்திற்கு வெளியே பொது இடங்களில் வண்ணச் சுவரொட்டிகளும், பிரச்சாரங்களும் செய்யப்படுவது தவிர்க்கப்படுகிறது.

இப்புதிய முறை தேர்தல் படிப்பாளிகளுக்கும், ஒழுக்க மாணவர்களுக்கும் முதலிடம் தருகிறது.

இவர்களால் "பண விரயமும், அரசியல் கலப்பின்மையும், "சம்திங்" கொடுத்து வாக்குப் பெறும் அநாகரிகத் தன்மையும்..." கல்லூரி நிறுவனங்களிலிருந்து விரைந்தோடும் என்பது திண்ணம்.

— சி. இரகுராமன்


# ஆஸ்துமாதானே!

ஆஸ்துமா, ஈஸ்னோபீலியா, இருதய நோய்கள், பால்வினை நோய்கள், மூட்டு வலி, மாதவிடாய் கோளாறுகள் மற்றும் எவ்வகை பெரிய நோய்களும் மிக விரைவில் சுகமடைய, மூலிகை சிகிச்சை பெற, இலவச கடித ஆலோசனை பெறலாம். முகவரி:

**ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்**
**டாக்டர். சி.கே. மாணிக்கவாசகம்,**
**செலந்தம்பள்ளி போஸ்ட்,**
**திருபபத்தூர் தாலுகா, (வ.ஆ.) 635 653**
**போன்: 469 TPT**

அறிவிப்பு: சென்னை, பெங்களூர், வேலூர், சேலம், திருச்சி, கோவை, மதுரை, திருப்பத்தூர் ஆகிய முகாம்களில் நேரிலும் ஆலோசனை பெறலாம்.


FREE E- BOOKS , www.thamizham.net.,

போட்டி சிறு கதை

# ஒதுக்கித்தள்ள ஒரு மனிதன்

தன் தந்தையின் கடுகடுப்பான முகத்தைக் காண மனதில் தெம்பு இன்றி வாஞ்சி தனக்கு அருகில் கிடந்த வார இதழ் ஒன்றை புரட்டலானான்.

"ஏண்டா வேலக்குப் போவலியா!" தந்தையின் பேச்சு அவனது கவனத்தை திருப்பியது. "போவல", "என்னா சமாச்சாரம் உடம்பு ஏதாவது சரியில்லியா?", "அதெல்லாம் ஒண்ணுமில்ல", "பின்ன ஏந்தா வேலக்கு போவல? வீட்டுல கொட்டிக் கிடக்குறதா நெனப்பா."

"எனக்கு அந்த வேல புடிக்கல"

"என்னா புடிக்கல, படிச்ச படிப்புக்கு வேல கிடைக்குமுனு கனவு காணுறியா, அது இந்த நாட்டுல இந்த ஜென்மத்துல நடக்காது. நானு முன்னமே புடிச்சு சொல்ற, பதிலத்தா மழுப்பி சொல்றானேயொழிய, வேலக்கு போறேன்னு சொல்றானா"

வயித்த கழுவுறதுக்கு எந்த வேலயாயிருந்தா எனக்கென்னா, என்னோட வேலக்கு தகுந்த கூலி கொடுக்கணுமில்ல, சரி அதைத்தா பொறுத்துக்குற. என்னைய மாதிரி பத்து பேரு வேல செய்யற இடத்துல, நாலு பேரு மாட்ட மேய்க்கிற மாதிரி மேய்க்கிறாங்க, பாலாப் போன தெர்மல் (மேட்டூருல) வந்தா விடிவு கிடைக்குமுனு நெனச்சா, காண்ட்ரக்ட்க்காரனுங்க வேல செய்யறவங்கல கொத்தடிமையா நெனக்கிறாங்க. நானும் மனுசன் தானே', நானுங் கொஞ்சம் படிச்சிருக்கிறனில்ல, அப்படிப்பட்ட இடத்துல என்னால வேல பாக்க முடியாது".

"ஆமாண்டா நீ ஒருத்தன் நின்னுட்டா, கொள்ளையடிக்கிறவனுங்க எல்லாந் திருந்திடுவானுங்களா",

FREE E- BOOKS , www.thamizham.net.,

இன்னிக்கு நானு நின்னாதா நாளைக்கு அவங்கள திரட்ட முடியும் என்னதா பசியா இருந்தாலும் புலி புல்லையா தின்னுதுனு, நீ தானப்பா அடிக்கடி சொல்லுவா, பசிக்குதேங்கிறதுக்காக எத்தன நாளைக்கு கொத்தடிமையா வேல செய்ய முடியும். உழைக்கிறவனுக்கு இந்த வேல இல்லாட்டினா இன்னொரு வேல, அதுக்கு முன்னாடி நானும் ஒதுங்கிக்க போறதில்ல, நாயாட்டம் எங்கள மிதிக்கிறவனுங்கள ஒதுக்கித் தள்ள என்னப் போல இருக்கிறவங்கள ஒன்னு சேக்கப் போறன்.”

தனது மகனின் வார்த்தைகள் சூடு போட்டது போல் ஆனதை அவர் உணரலானார். ‘உழைப்புக்கு தகுந்த ஊதியம் என்று கிடைக்குமோ’ என நினைத்து ஏங்கலானார். அதே சமயம் அப்படி, உழைப்பைச் சுரண்டுபவர்களையும் ஒதுக்கித் தள்ள ஒரு மனிதனாய் தன் மகன் இருப்பதை நினைத்து பெருமைப்படலானார்.

— கே.வி. ராஜேந்திரன்.


அழகிய அச்சு வேலைகளுக்கு

**மீரா பிரஸ்**

எல்லாவித தமிழ், ஆங்கில எழுத்துக்களும் உண்டு.
தொடர்பு கொள்க:
மீரா பிரஸ்
ஏ.ஈ. 103, அண்ணாநகர், சென்னை — 600 040.
தொலைபேசி — 613289


"சுட்டி" மாத இதழ் ஐந்தாம் ஆண்டில் வெற்றி நடை போடுவதில் மிக்க மகிழ்ச்சி!
Dr. K. வன்னியராஜ், R.I.M.P., R.H.M.P.
ஆசிரியர்: "ஆரோக்கிய மலர்" (மருத்துவ இதழ்)
16, சம்மந்தமூர்த்தி தெரு, மதுரை - 625 001.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இளைஞர்
ஆண்டு?



ஒரு முறை
ஊனமுற்றோர் ஆண்டு
கொண்டாடியதாய் ஞாபகம்
இப்பொழுது
இளைஞர் ஆண்டு
அது சரி!
இரண்டுக்கும் பெரிதாய்
என்ன வித்தியாசம்?

— இளையமகன்

## வயிற்றெரிச்சல் செய்திகள்

* தமிழக அரசின் பல்வேறு நிறுவனங்கள் செய்த வியாபாரத்தில் நடப்பு ஆண்டு நஷ்டம் 100 கோடி ரூபாய். அதில் தமிழக மின்துறை 6 கோடி நஷ்டம் விளைவித்து சாதனை புரிந்துள்ளது!

* தமிழைப் பாதுகாக்க, பரப்ப என்று எழுந்த தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் புத்தக வெளியீடுகள் என்ன சாதனை புரிந்திருக்கின்றன தெரியுமா? பெரிய திருமொழி விலை ரூ.130/—; கலித்தொகை ரூ.150/—; நீலகேசி ரூ.140/—. ஆகா! அற்புதம் தமிழைப் பரப்பும் முறை!

— சுட்டி பாரதி

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா 12 இதழ்கள் அஞ்சலில பெற ரூ 7 00 பணவிடை செயயுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: "சுட்டி". 1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண் 1 முதல் 17, 19, 21, 22, 23, 24 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50-வது இதழ் 0·75 காசு. மற்ற இதழ் ஒன்றுக்கு 0·45 காசு வீதம் அஞ்சல் தலை/பண விடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,

தலைவர்கள் ஐந்து குறுநாவல்களின் தொகுப்பு (24.00) செ. யோகநாதன்

இன்று நிஜம் சிறுகதைத் தொகுப்பு (18.00) சுப்ரமண்யராஜு. இவை இரண்டும் வெளியீடு: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தி. நகர், சென்னை — 600 017.

இந்த எரிமலை ஒருநாள் எழுந்திருக்கும் கவிதைத் தொகுப்பு (75 காசு) தரும. இரத்தினகுமார் — இளம்பிறை ஏஜன்சிஸ், 118, சமயபுரம் ஆள்வார்பேட்டை, குன்னூர் — 643 101, நீலகிரி.

ஆரோக்கிய மலர் மருத்துவ (மாத) இதழ் — ஆசிரியர் டாக்டர் கே. வன்னியராஜ், 16, சம்பந்த மூர்த்தி தெரு, மதுரை — 625 001, ஆண்டு சந்தா ரூ.10.00

பெரியாருக்குப் பின்... இயக்கம் ஒரு பரிசீலனை (2.50) பெரியார் தாசன் — கே.ஏ. பதிப்பகம், 59, ஆற்காடு ரோடு, சென்னை — 600 024.

திருவள்ளுவரின் நீதிக் கதைகள் (6.00) திருக்கோவிலூர் சிவசக்தி

சுலபமான முறையில் சிறு தொழில்கள் (7.50) ஜனார்த்தனம் — மயிலவன் பதிப்பகம், 7, எம்.கே. அம்மன் கோயில் தெரு,மயிலாப்பூர், சென்னை — 600 004.

## எமக்கு

புதியதோர் உலகம் (நாவல்) (20.00) — தீப்பொறி வெளியீடு முகவரி இல்லை.

ரூபா டிராவல் கைடு (மதுரை மாநகர் வழிகாட்டி) (2.50) ஆசிரியர் — ஆர்.டி. ஜெகன்னாதன், 36, குருவிக்காரன் சாலை, மதுரை — 625 009.

விஞ்ஞான விவசாயம் மாத இதழ் — 45, பிள்ளையார் கோவில் தெரு, கோவில்பட்டி — 627 701. தனியிதழ் ரூ.2.50. ஆண்டு சந்தா ரூ.25/—

தடைகளை வென்று தலைமை பெற்ற ம.பொ.சி. (7.50) — பெ.சு. மணி.

மேகத்தின் தாகம் (8.00) — டாக்டர் சரளா ராசகோபாலன்.

இலக்கியங்களிலே இன சமயக் கலப்புகள் (7.00) — ம.பொ.சி.

தோழர் சிங்காரவேலரின் வீர வாழ்க்கை (5.00) — ம.பொ.சி.

இவை நான்கும் கிடைக்குமிடம்: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக் குளம், மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை — 600 004.

மினியேச்சர் இந்தியா — அந்தமான் + நிக்கோபர் தீவுகள் வழிகாட்டி நூல் (ஆங்கிலம்) (15.00) — வானதி புக் ஹவுஸ், போர்ட் பிளேயர், அந்தமான் நிக்கோபர் தீவுகள்.

தாலாட்ட மறந்த தமிழ்க்கவிஞன் (13.25) — சேயோன் அல்லயன்ஸ் கம்பெனி — த.பெ. 617, மயிலாப்பூர், சென்னை — 600 004.

மீட்போம் தமிழீழம் கவிதை நூல் (1.00) மருத்துவர் மறையரசன் — தமிழர் இனநல உரிமை இயக்கம், நீடாமங்கலம்.

பருவக்கூற்று நாடகம் (7.00) — குழந்தைதாசன் — கனிமொழி பதிப்பகம், திருட்டிணராயபுரம் — 639 102, திருச்சி மாவட்டம்.

காய்க்கத் தெரியாத காகிதப் பூக்கள் கவிதை நூல் (5.00) மதுக்கூர் இராமலிங்கம் — திருநாவுக்கரசு பதிப்பகம் — விக்ரமம், மதுக்கூர் — 614 903.

பாடகன் வருகிறான் கவிதை நூல் (7.00) கோவை. கிருபாகரன்.

காலச்சுவடுகள் கட்டுரைகள் (15.00) இல. செ. கந்தசாமி. விஜயா பதிப்பகம், 6, ராஜு வீதி, கோவை — 641 001.

புதுமுறை பஞ்ச தந்திரக்கதைகள் (15.00). நாரா. நாச்சியப்பன், தமிழாலயம், 137, ஜானிஜான்கான் தெரு, சென்னை — 600 014.

நெஞ்சையள்ளும் சிறா முதல் பகுதி (15.00) சிலம்பொலி சு. செல்லப்பனார், மீரா பப்ளிகேஷன் ஏ.ஈ.103, அண்ணாநகர், சென்னை — 600 040.

திப்பு நகரில் வம்பு (1.00)ச.அ. டேவிட் — முகவரி குறிக்கப்படவில்லை.

## வந்தவை

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது வாழைத்தண்டு மருத்துவம்

**உடல் கனம் குறைய:** 'யானை கொழுத்தால் வாழைத்தண்டைக் கொடு' என்பது பழமொழி. கொழுப்பைக் குறைக்க வாழைத்தண்டு மிகச் சிறந்தது. ஒரு நாள் விட்டு ஒரு நாள் சமைத்துண்டால் உடல் கொழுப்பு குறைந்து இளைக்கும்.

**சத்துக்கள் விவரம்:** ஈரம் — 88.3 கி; புரதம் — 0.5 கி; கொழுப்பு — 0.1 கி; தாது உப்புக்கள் — 0.6 கி; நார் — 0.8 கி; சர்க்கரைச் சத்து — 9.7 கி; சுண்ணாம்புச் சத்து — 10 மி.கி; பாஸ்பரஸ் — 10 மி.கி; இரும்பு — 1 மி. கி; தையமின் — 0.02 மி.கி; ரிபோஃபிளேவின் — 0.01 மி.கி; நியாசின் — 0.02 மி.கி; வைட்டமின் 'சி' — 7 மி.கி; சக்தி — 42 கி. கலோரி.

**கொசுக்கடிக்கு:** கொசுக்கடித்து தடிப்பு ஏற்பட்டால், வாழைத்தண்டை இரண்டாக வெட்டி, வெட்டிய பகுதியைக் கொசுக்கடித்த இடங்களில் சில நிமிடங்கள் தேய்க்கக் குணமாகும்.


**முகப்பருவிற்கு:** வாழைத்தண்டைப் பாதியாகப் பிளந்து முகப்பருவுள்ள இடங்களில் நாளும் 2 நிமிடங்கள் தேய்த்து வந்தால் பருக்கள் நீங்கி முகம் அழகாகும்.

கீழ்க்கண்ட நோய்கள் வராமலிருக்கவும், வந்தால் குணப்படுத்தவும் ஆற்றலுடையது வாழைத்தண்டு:- மூத்திர எரிவு, நீரடைப்பு, மூத்திரப் பையில் கல் போன்ற சிறுநீர் சம்மந்தப்பட்ட சகல பிரச்சனைகளுக்கும் கைகண்ட மருந்து வாழைத்தண்டு. நீரிழிவு, வயிற்றுப்புண், சரும நோய்கள், வயிற்றுப் பூச்சி, பல்லில் பூச்சி, மஞ்சட் காமாலை போன்றவற்றிற்கு அடிக்கடி உண்க. குழந்தைகட்கும், நிறை கர்ப்பிணிகட்கும் வாழைத்தண்டு உகந்ததல்ல.

— சித்தன்

(அடுத்து: நமது "சிரிப்பு மருத்துவம்")

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: க. நாராயண பாரதி, வெளியிடுவோர்: கி.ராமச்சந்திரன் 1494, அண்ணா நகர், சென்னை-40.
அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, Dr. நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை- 600005.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

சுட்டு: மாத இதழ் 1 SEP 1985 Regd. No. TN/MS(N)/317
Allowed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-58

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,